இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

1876 – 2026

150 ஆண்டுகள்

# பாதுகாவலன்

PAATHUKAVALAN


Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 150 | இதழ் : 02 | திகதி : 15.02.2026 | விலை : 50.00

## 'கடுஞ்சொற்களையும் வீண் தீர்ப்புகளையும் தவிருங்கள்'

### தவக்காலச் செய்தியில் திருத்தந்தை



2026-ஆம் ஆண்டு தவக்காலத்தையொட்டி, திருத்தந்தை 14ம் லியோ விடுத்துள்ள செய்தியில், பிறரைக் காயப்படுத்தும் சொற்களைத் தவிர்த்து, அமைதி மற்றும் நம்பிக்கையை விதைக்க அழைப்பு விடுத்துள்ளார்."மற்றவர்கள் மனம் புண்படும் வகையில் பேசுவதைத் தவிர்ப்பது ஒரு சிறந்த நோன்பு" என்று குறிப்பிட்ட திருத்தந்தை, பிப்ரவரி 18 திருநீற்றுப் புதனுடன் தொடங்கும் இந்தத் தவக்காலத்தில் கடவுளை நம் வாழ்வின் மையமாக மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். வெறும் உணவுத் தவிர்ப்பு மட்டுமல்லாது, புறங்கூறுதல், அவதூறு பேசுதல் மற்றும் பிறரைத் தவறாகத் தீர்ப்பிடுதல் ஆகியவற்றிலிருந்து விலகி இருக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.உடல் ரீதியான நோன்பு நம்மிடம் உள்ள நீதிக்கான தாகத்தை உயிர்ப்பிக்கும் என்று கூறிய அவர், சமூக வலைதளங்கள், அரசியல் விவாதங்கள் மற்றும் குடும்பங்களில் கனிவான சொற்களைப் பயன்படுத்தக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், ஏழைகளின் கதறலுக்குச் செவிமடுத்து, வெறுப்புப் பேச்சுகளைக் கைவிட்டு, திரு அவைச் சமூகம் அரவணைக்கும் இடமாக மாறவேண்டும் எனத் திருத்தந்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

## 'தவக்காலத்தில் மேற்கொள்ளுகின்ற நோன்புகளும் தவ முயற்சிகளும் எம்மைச் சூழவுள்ள ஏழைகள், துயருறுவோருக்கு வாழ்வு கொடுக்க வேண்டும்.'

- தவக்காலச் சுற்றுமடலில் யாழ் ஆயர்



தவக்கால ஆரம்பத்தில் யாழ் ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் குருக்கள், துறவிகள், பொதுநிலையினருக்கு அனுப்பி வைத்த சுற்றுமடலிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இச் சுற்றறிக்கையில் :

தவக்காலம் அருட்கொடைகளின் நாட்கள்! ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பிற்கு நம்மைத் தகுந்த விதத்தில் தயாரிக்க இறைவன் நமக்குத் தரும் வாய்ப்பே தவக்காலம் எனவும், துக்க நாட்களாகக் கருதப்பட்ட தவக்காலம் இன்று அருளின் காலமாகப் புகழ்பெற்றுள்ளது. நம்முடல், உள்ளம், அறிவு, ஆன்மா, இயற்கை யாவும் தூய்மையும் செய்வதற்கான அருளின் காலமாக இத்தவக்காலம் அமைகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். **பக்கம் 02 இல் முழுமையான சுற்றுமடலைக் காண்க.**

## யாகப்பர் மண்டபத் திறப்பு விழா

குருநகர் புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட யாகப்பர் மண்டபம் கடந்த 14ஆம் திகதி யாழ்.ஆயரால் திறந்து வைக்கப்பட்டது .

பங்குத்தந்தை அருட்தந்தை அருளானந்தம் யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து புதிய மண்டபத்தை ஆசீர் வதித்துத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குமக்களெனப் பலரும் கலந்து கொண்டனர். இம் மண்டபமானது பொது நிலையினரின் பயன்பாட்டிற்குப் பேருதவியாக அமையும்.





## நாக்கியபுலம் புனித லூர்து அன்னை ஆலய திருவிழா



சுன்னாகம் நாக்கியபுலம் புனித லூர்து அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை நிக்ஸன் கொலின்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது. 9ம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 10ம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை யோசப்தாஸ் ஜெபரட்ணம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை குளமங்கால் பங்குத்தந்தை அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராஜர் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழாத் திருப்பலி ஆரம்பத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள ஆலயத்திற்கான அடிக்கல்லும் குருமுதல்வர் அவர்களால் நாட்டிவைக்கப்பட்டது. திருவிழாத் திருப்பலியில் கார்மேல் கன்னியர் சபை அருட்ச கோதரிகள், பங்குமக்களெனப் பலரும் கலந்து செபித்தனர்.

## பருத்தித்துறை தும்பளை புனித லூர்து அன்னை திருத்தல வருடாந்தத் திருவிழா



பருத்தித்துறை தும்பளை புனித லூர்து அன்னை திருத்தல வருடாந்த திருவிழா பரிபாலகர் அருட்தந்தை T.கிருபாகரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது. 02ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 10ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தனர். தும்பளை லூர்த்து அன்னை கெபிகட்ட ப்பட்டு இவ்வருடம் 100 ஆவது ஆண்டு நிறைவாக அமைந்துள்ளமையும் இங்குகுறிப்பிடத்த க்கது.

## நாவையில் திருப்பாலத்துவ சபை சின்னம் வழங்கும் நிகழ்வு



நாவாந்துறைப்பங்கில் திருப்பாலத்துவ சபையின் திருப்பாலர்கள் 70 பேருக்கு நிரந்தர சின்னம் வழங்கும் சடங்கு கடந்த 15ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி இயூஜின் அடிகளார் தலைமையிலும், அருட்பணி டினுசன் அடிகளாரின் வழிகாட்டலிலும் நடைபெற்ற இன்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குநர் அருட்பணி எயின்சிலி றொஷான் அடிகளார் திருப்பலியை தலைமையேற்று ஒப்புக் கொடுத்து சிறார்களுக்கு சின்னங்களை சூட்டினார்.

அன்று மாலை சிறார்களினால் சிறப்பான நிகழ்வுகளைக் கொண்ட கலைநிகழ்ச்சி இடம்பெற்றது.




## "மடுமாதா திருத்தலத்தின் வரலாறு" நூல் வெளியீடு

"மடுமாதா திருத்தலத்தின் வரலாறு" நூல் வெளியீடு ஜனவரி மாதம் 24ஆம் திகதி மன்னார் தோட்டவெளி - வேதசாட்சிகளின் இராக்கினி திருத்தலத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்டக் குருவும் வாழ்நாள் பேராசிரியருமான அருட்தந்தை ஞானமுத்து பிலேந்திரன் அவர்களால் எழுதப்பட்ட இந்நூலை யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.




# இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ். மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொது நிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் தவக்காலச் சுற்றுமடல்



## கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே!

**முன்னுரை**

தவக்காலம் அருட்கொடைகளின் நாட்கள்! ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பிற்கு நம்மைத் தகுந்த விதத்தில் தயாரிக்க இறைவன் நமக்குத் தரும் வாய்ப்பே தவக்காலம் ஆகும்.

துக்க நாட்களாகக் கருதப்பட்ட தவக்காலம் இன்று அருளின் காலமாகப் புகழ்பெற்றுள்ளது. நம்முடல், உள்ளம், அறிவு, ஆன்மா, இயற்கை யாவும் துப்புரவும் தூய்மையும் செய்வதற்கான அருளின் காலமே இத்தவக்காலம் ஆகும்.

சிலுவையில் நமக்காகத் தன்னுயிர் ஈந்தவர் இயேசு. அவரது நற்பண்புகளைப் பின்பற்ற நினைவூட்டுகின்றது தவக்கால நாற்பது நாட்கள். இன் நாட்களில் இயேசுவோடு பயணிக்க மீண்டும் ஒரு அரிய வாய்ப்பு நமக்குக் கிட்டியுள்ளது.

பணம், பலம், அதிகாரம், ஆற்றல், சாத்தானின் தந்திரம் எனத் தமக்கு ஏற்பட்ட சோதனைகளை வென்ற இயேசுவின் உள்ளார்ந்த சுதந்திரத்தை நாமும் பெறுவதற்கு வழிகாட்டுகின்றன இந்தத் தவ நாட்கள். தந்தையாகிய கடவுளை முழுமையான ஆற்றலோடு அன்பு செய்ய, எமது இதயத்தையும், ஆன்மாவையும் பக்குவப்படுத்த, தவக்காலம் உதவி புரியவேண்டும். வெளிச் சடங்குகளில் நின்றுவிடாது, உள்ளார்ந்த மாற்றத்தை முன்வைக்கின்றன இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் நிகழ்வுகள். எனவே இத்தவத்தின் நாற்பது நாட்களையும் மன மாற்றத்தைத் தேடும் நாட்களாகப் பயன்படுத்துவோம். எமது இறை நம்பிக்கையைப் புதுப்பித்து, இறைவேண்டல், பரித்தியாகங்கள் வழியாக இறைவனுடன் நெருங்கி வாழ்வோம்.

திருத்தந்தை 14ம் லியோ அவர்கள் தமது தவக்காலச் செய்தியில் கடவுளுடைய வார்த்தைகளுக்கு நம் இதயங்களைத் திறக்கும்போது மனமாற்றம் தொடங்குகிறது எனக் குறிப்பிடுகின்றார். இறை மக்களாகிய நாம் திருவிவிலியத்திற்கும் ஏழைகள், துயருறுவோரின் குரலுக்கும் கவனமுடன் செவிமடுக்கும்போது இறைவனுக்கே குரல் கொடுக்கின்றோம்.

“உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இருதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்” என்கிறார் ஆண்டவர். (யோவேல் 2:12) இவ் இறைவார்த்தைக்கு அமைவாக இத்தவக்காலத்தில் நாங்கள் மேற்கொள்ளுகின்ற நோன்புகளும் ஏனைய தவ முயற்சிகளும் எம்மைச் சூழவுள்ள ஏழைகள், துயருறுவோருக்கு வாழ்வு கொடுத்து இறைவனிடம் எம்மை இணைக்க வேண்டும். நாம் இத்தவக்காலத்தில் நம்மைவிடத் தாழ்நிலையில் வாடுவோரைத் தேடிச் சென்று உதவவேண்டும்.

**சமூகத் தொடர்பு சாதனங்களைப் பொறுப்புடன் பயன்படுத்துவோம்**

இவ்வாண்டை யாழ். மறைமாவட்டம் சமூகத் தொடர்பாடல் ஆண்டாகக் கடைப்பிடிக்கின்றது. இக்காலத்து சமூகத் தீமைகளுக்கு சமூகத் தொடர்பு சாதனங்களே மூல காரணமாகின்றது. பெரியவர் முதல் இளையவர் வரை சமூகத் தொடர்பு சாதனங்களுக்கு அடிமையாகி அவற்றை சீரற்ற முறையில் பயன்படுத்துவதனால் பல உறவின் விரிசல்களும், குடும்ப நல்லுறவின்மையும் அதனால் பல பாவங்களும் மலிந்து வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இதற்கான பிரதான காரணம் பொறுப்பற்ற முறையில் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதும், அதற்கு அடிமையாவதுமே.

எனவே, தவக்காலத்தில் நாம் செய்யும் பரித்தியாகங்களில் சமூகத் தொடர்பு சாதனங்களைப் பொறுப்புடன் மனித நேயத்தை மதித்து, நேசித்து, உறவுகளைக் கட்டியெழுப்புகின்ற நிலைகளில் பயன்படுத்தப் பழகுவதும், திரை நேரத்தை (ளுஉசநநெ வுைஅந) மட்டுப்படுத்துவதும், அவ்வாழ்வின் முறைமையை எம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதும் தவக்காலத்தின் சிறப்பான பரித்தியாகமாக இவ்வாண்டில் கடைப்பிடிப்போம்.

**போதைப் பாவனைக்கு முற்று வைப்போம்**

எமது பிரதேசத்தில் இளையோரை இலக்கு வைத்து போதைப் பொருட்களை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது வேதனைக்குரிய விடயமாகும். குறிப்பாக கத்தோலிக்கர்கள் செறிவாக வாழும் கரையோரப் பிரதேசங்கள் ஊடாக வியாபாரம் வியாபித்து வருவது வேதனை தருவதாக இருக்கின்றது.

இக்கால அரசு போதையை நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் மாகாண ரீதியாக மேற்கொள்ளுகின்ற செயல்திட்டமானது இப்பாரிய தீமையிலிருந்து எம் பிரதேசங்களை மீட்க வேண்டும். நாமும் பொறுப்புள்ள விதத்தில் இத்தீமைகளுக்கு அடிமையானோருக்கு மறுவாழ்வும், விற்பனையில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்தவும் எமது ஒத்துழைப்பை வழங்கி, ஆவன செய்யவேண்டும். கிராம ரீதியாக எம் இளைய சமுதாயத்தைப் பாதுகாப்போம்.

சமகால அரசியல் நிலைப்பாடு

சமகால அரசினால் மக்களுக்கு உறுதிமொழிகளுக்கு மேல் உறுதி மொழிகள் வழங்கப்படுகின்றனவே தவிர, எவையும் செயல்முறைப்படுத்தப்படவில்லை என்பது தான் வேதனைக்குரியது. ஒற்றுமையாக ஒன்றிணைந்து தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய எம் தலைமைகள் சுயநலப்போக்குக் கொண்டவர்களாகப் பிளவுபட்டு உள்ளமை ஓர் துர்ப்பாக்கிய நிலைமையே! சமூக நலன் விரும்பிகளும், புத்திஜீவிகளும் தமிழ்த் தலைமைகளுக்குள் ஒற்றுமையைக் கொணர முயற்சிகள் எடுக்க வேண்டியமை கட்டாயத் தேவையாகும். உயிர்த்த இயேசு கொணரும் நிலையான அமைதி எமக்குக் கிடைக்க நம்பிக்கையுடன் இறைவனை மன்றாடுவோம்.

**எம் மறைமாவட்டத்திற்கு மூன்று புதிய அருட்பணியாளர்கள்**

யாழ் மறைமாவட்டத்திற்கு இறைவன் இவ்வாண்டில் மூன்று புதிய அருட்குரவர்களைத் தர இருக்கின்றார். இவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18ம் திகதி யாழ் பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். இறைவன் யாழ். திருஅவையை இறை அழைத்தலால் தொடர்ந்து அணிசெய்வதற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பதுடன், இப் புதிய குருக்களுக்காக இறைவேண்டல் செய்யும்படியும் வேண்டி நிற்கின்றேன்.

நிறைவாக

“மனிதனே! நீ மண்ணாக இருக்கின்றாய், மண்ணுக்கே திரும்புவாய்” என்பதை இத் தவக்காலத்தில் உணர்ந்தவர்களாக, வெறுமையாய் இறந்து, பெருமையாய் உயிர்த்த இயேசுவைப்போல் நாமும் வெறுமையாய் இறப்போம் பெருமையாய் உயிர்ப்போம்.

இறை இயேசு உங்கள் ஒவ்வொருவரையும், உங்கள் குடும்பங் களையும் இவ் அருளின் காலத்தில் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள,*

**பேரருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
**யாழ். மறைமாவட்ட ஆயர்**

---

## என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**




*(றொஷான், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: ‘பேச்சுப் பேச்சா இருக்கனும்’ என்று நீங்கள் முகநூலில் எழுதியதை பலரும் கூறியிருக்கிறார்கள்! அப்படி என்ன எழுதியிருக்கிறீர்கள்?**

**பதில்:** றொஷான், சில பேச்சாளர்கள் அல்லது உரையாளர்கள் (நிகழ்வின் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர், விமர்சன உரை நிகழ்த்துபவர், வெளியீட்டு உரை நிகழ்த்துபவர் போன்றோர்), “சுருக்கமாக உரையாற்ற வேண்டி இருக்கிறது அல்லது என் உரையைச் சுருக்கமாகவே ஆற்ற விரும்புகிறேன்!” எனக் கூறி உரையைத் தொடங்குவார்கள். தொடங்கி ‘கண்மண் தெரியாமல்’ உரையாற்றி, அதாவது நேரத்தை எந்தவிதத்திலும் கருத்தில் கொள்ளாது 10 நிமிடத்தில் ஆற்றவேண்டிய உரையை 20 நிமிடங்கள் எடுத்து உரையாற்றிவிட்டு, உரையை நிறைவு செய்யும் வேளை,“நேரத்தைக் கருத்தில்கொண்டு இன்னும் ஒரு விடயத்தை மட்டும் கூறி என் உரையை முடிக்கலாம் என நினைக்கிறேன்” என மேலும் 5 நிமிடங்கள் எடுத்து விமான நிலையம் அடைந்தும் தரையிறங்காது (land பண்ணாது) ஆகாயத்தில் சும்மா சுற்றுகிற விமானம் மாதிரிச் சுற்றியடித்த பின்னர் தரை இறங்குவது போல - இப்பேர்ப்பட்டவர்களும் தமது உரையை முடிப்பார்கள்! இப்பேர்ப்பட்ட உரையாளர்களை அவதானித்து இருக்கிறீர்களா? இவ்வாறான நேரங்களில் உங்கள் உணர்வுகள் எப்படி இருக்கும்? உங்கள் கருத்து? என்று ‘பேச்சுப் பேச்சா இருக்கணும்!’ என்ற தலைப்பில் எழுதியிருந்தேன்.

*(விஜி, மன்னார்)*

**கேள்வி: அடிக்கடி தன் மனைவியைக் ‘கழுதை கழுதை’ என்று கூறிக் குற்றம் கண்டுபிடிக்கும் கணவனுக்கு நல்ல பதிலாக என்ன பதில் கூறலாம்!**

**பதில்:** ஒருமுறை கணவன், “உன்னைக் கட்டினதுக்கு ஒரு கழுதையைக் கட்டியிருக்கலாம்!” என்றதற்கு மனைவி, ‘நீங்க சொல்லிக்கிண்டே இருங்க, அதைச் செய்யாதீங்க! நான் எப்பவோ செஞ்சிட்டேன்!” என்றாளாம்!

*(ராணி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: இன்று பிள்ளைகளுக்கு பரிசுப் பொருளாக பெற்றோர் நல்ல ஸ்மாட் போன், மிக விலைகூடிய மோட்டார் சைக்கிள்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். இன்றைய காலத்தில் இவற்றைக் கொடுப்பது சரியா?**

**பதில்:** காலத்திற்கேற்ற நல்ல கேள்வி ஒன்றைக் கேட்டிருக்கிறீர்கள்! அண்மையில் முகநூலில் வாசித்த ஒரு வசனம் உங்கள் கேள்விக்கான பதிலாகவும் பல பெற்றோரின் சிந்தனைக்கும் மிகப் பொருத்தமாக அமையும்.அக்கூற்று: “மகனை இழக்க வேண்டும் என்றால் ஒரு ‘பைக்’ வாங்கிக் கொடு! மகளை இழக்கவேண்டும் என்றால் ஒரு ‘போன்’ வாங்கிக் கொடு!” என்பதுதான்.

---

## இன்னலில் என் தாயிடமிருந்து ஓர் குரல்

நெடுஞ்சாலையில் தனித்த மரமாய்
இருள் சூழ்ந்த ஆகாயத்தை நோக்கி
ஏதேதோ கனவுகளில் மிதந்து
வந்திருப்பேனோ தெரியவில்லை

ஓரமாய் நின்ற சாத்தானின் - மறு உருவமாய்
கறுப்புத் தோலை பின்னிய மேனியை
ஆடையாய் உடுத்திய ஓர் அரக்கனைச்
சந்திக்க நேரிட - ஒரு பதுமையாய்
அப்பொழுதில் இருப்பதே என்னை
சிலிர்க்கச் செய்தது

கால்கள் விறுவிறுக்க: மேனியெல்லாம்
பனித்துளிபோல வியர்வையாய் கொட்டிட
கண்கள் எல்லாம் பதற்றத்தில் கலந்திட
எனை நோக்கி அவ் உருவம்
தொடர அவ்விடத்திலிருந்து ஓடினேன்

என் வெண்பூக்கள் வெள்ளத்தில்
தத்தளிக்க: நா வறட்ட:
கால்கள் திறைமாற
ஆறறிவு கெட்டு ஏதோ வழியில்
சென்றிட: மன அங்கலாய்ப்பில்
என் உருவம் அசைந்தாடி

யாருமில்லா அவ்வேளையில்
கும்மிருட்டில் ஓர் ஆயம்
தஞ்சமே நீ தானே என
என் உள்ளம் விரைந்தது
அடைக்கல தாயை நோக்கி

செய்வதறியாத சிறு பிள்ளை நான்
தாயின் முகப்பிலிருந்த பளிங்கு
பெட்டியில் விழுந்து குழம்பிய
மனதோடு குளறிட
என்னைப்போல இன்னொருத்தியும்
அங்கு அடைக்கலம்புகுந்தாள் போலும்

கனவா .... நிஜமா....
என்ன அற்புதம்
கனவிலும் உடல் சிலிர்த்தது
என் மேனி எங்கும் வல்லமை
உதிரம் ஆறாய்ப் பாய்ந்தது

அன்னை திரும்பி
“துன்பம் உன்னை விட்டு நீங்கிற்று”
எனும் ஒலி அக்குமுறலில் கேட்டு
அரவணைக்க
தாய் இருக்க நான் ஏன் ஐயமுற
எனும் துணிவில் நன்றி கூற
வார்த்தை இல்லாமல்
அவ்விடத்திலிருந்து நகர்ந்தேன்

இதுவரை
அக்கொடிய அரக்கனை
கண்டதில்லை கண் முன்னே
தாயின் அடைக்கலத்தால்...

**எறின் டீனுயா உமாகாந்**

# “மண்ணாய்ப் போ!”



**கரவையூர்ச் செல்வம்**

## முன்னுரை

நான் வளர்ந்து வரும் காலத்தில், சிலர் யாரையாவது திட்டும் பொழுது “மண்ணாய்ப் போ”என்று சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன். வேறு சிலர் மண்ணைக் கையில் எடுத்து கோபப்பட்டவர்கள் பால் அம்மண்ணை எறிந்து “மண்ணாய்ப் போ” என்று திட்டியதைப் பார்த்தும், கேட்டும் இருக்கிறேன்.

தொடக்க நூலில் “அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்” (தொ 2:7) என்று எழுதியுள்ளது.

எங்கள் ஊர்களில், “மண்ணாய்ப் போ” என்று திட்டும்பொழுது அவர்கள் இந்த வசனத்தை அடிப்படையாக வைத்தே திட்டுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது! அவ்வாறெனில், அது ஒரு விவிலியத் திட்டல்! என்று துணியலாமா? தவக்காலமென்றால் சிரிக்கக்கூடாது, முகத்தை முக்கோணத்தில் வைத்து, ஒரு மன அழுக்கத்தில் வாழவேண்டும் என்பதல்ல. சிரிப்பு வந்தால் சிரியுங்கள். சிரிப்பு வராவிட்டால், முயற்சி செய்யுங்கள்.

முன்னைய காலத்தில் திருநீற்றுப் புதனன்று திருவழிபாட்டில் சாம் பலைக் குரவர் பக்தர்களின் நெற்றிகளில் பூசி “மண்ணில் இருந்து வந்தாய்! மண்ணுக்கே திரும்புவாய்”என்று கூறிய ஞாபகம். கொஞ்சம் பயமாகவே இருந்தது! ஒருவேளை அவர்களும் துவக்க இயலை மையமாக வைத்தே கூறினார்களோ! “மண்ணாய்ப் போ” என்று திட்டுபவர்களுக்கும், மண்ணுக்கே திரும்புவாய்” என்ற கூற்றிற்கும் பெரிய வேறுபாடு தெரியவில்லை. இருப்பினும், யதார்த்தமும் அது தானே?

## மனம் மாறுங்கள்

திருமுழுக்கு யோவான் பாலைவனத்தில் குரல் கொடுத்தபொழுது, “பாவ மன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என்று பறை சாற்றினார்” என்று மாற்கு எழுதியுள்ளார்(மாற்.1:4).

இன்று கத்தோலிக்க ஆலயங்களில் திருவழிபாட்டிற்கு முன்னர், சாம்பலை மக்கள் நெற்றிகளில் பூசி “மனம் மாறி நற் செய்தியை நம்புங்கள்”என்று குருக்கள் சொல்லி வருகிறார்கள். இது, ஒரு சடங்கு தான். இச்சடங்கின் பொருளை உணராது, நெற்றியில் எப்படியாவது “விபூதி” (சாம்பல்) பூச வேண்டுமென்று முண்டியடித்துக்கொண்டு ஒழுங்கையும் குழப்பிக் கொண்டு சாம்பல் பூசத் துடிக்கும் மக்களை என்னவென்று சொல்வது! இது போதாதென்று, கெ-5555555555555ாஞ்சம் சாம்பலை ஒரு கடதாசியில் அல்லது தீப்பெட்டியில் போட்டுக் கொண்டு வீட்டுக்குப் போவோரும் உண்டு. பக்தியின் நீடிப்பு! எனக்கு ஏதாவது ஓர் அதிகாரம் இருந்தால் (பயப்படாதீர்கள், கிஞ்சித்தும் இல்லை) சாம்பல் பூசும் பொழுது நான் சொல்வேன்; “உங்கள் அடிமை வாழ்விலிருந்து மனம் மாறி கிறீத்துவில் விடுதலை பெறுங்கள்”. இதுதான், எனது தவக்காலச் செய்தி.

மனம் மாறுவது மிகவும் பொருள் பொதிந்த சொல். மனிதருக்கு மிகவும் கடினமானதொன்று.

நடத்தைகளை மாற்றலாம். ஆனால் அதுவொரு நீண்ட கால மாற்றமாகாது. மனமாற்றம் மன நிலைமாற்றம் (change of mind - set) மிகவும் கடினமானது. ஆயினும், அதுவே அடிப்படை மனமாற்றம். அவ்வாறான மாற்றம் ஏற்படும் பொழுது எனது பேச்சு மாறும், எனது உரையாடல்கள் மாறும், எனது உறவுகள் மாறும், எனது செப முறை மாறும், எனது வழிபாடு மாறும், நான் பிரச்சினைகளை அணுகும் முறை மாறும், எனது சிந்தனை மாறும், ஒரு திறந்த மனமுடையவனாக நான் மாறுவேன்.

இப்பேர்ப்பட்ட ஒரு மாற்றத்தைத்தான் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் விளக்கியுள்ளார். “இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் (மனமென்றும் சொல்லலாம்) புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்பொழுது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது. எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்”, (12:2). இப்படிப்பட்ட ஒரு மனமாற்றத்திற்கு தவக்காலம் அழைக்கிறது. ஆயினும் இந்த மனமாற்றம் ஒரு தொடர் மனமாற்றமாக மாறவேண்டும்.

## உலகப்போக்கு

“இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள்”. உலகப் போக்கு என்று நாம் குறிப்பிடுவது என்ன? இன்றைய உலகப் போக்கு என்ன? முதலாவது தன்னிச்சையான வாழ்க்கை. அதாவது, நான் உண்டு, எனது ஆசைகள் உண்டு, நான் நினைத்ததைச் செய்வேன். இதை Individualism என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இது, ஓர் உலகளாவிய நோயாக மாறி வளர்கிறது. துறவறத்திலும், குருத்துவத்திலும் கூட நுழைந்து விட்டது. குழும வாழ்விற்குப் பரம விரோதி இந்தத் தன்னிச்சையான வாழ்க்கை. அதேபோன்று குடும்ப வாழ்வைக் குலைக்கும் இந்தத் தன்னிச்சையான வாழ்க்கை.

இரண்டாவது, நுகர்வுக் கலாசாரம். தேவையென்று ஒன்றைப் பெறுவது (வாங்குவது) ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. நுகர்வுக் கலாசாரம் தேவையில்லாவிட்டாலும் அதை வாங்கத்தான் வேண்டுமென்று வாங்குவது, இப்பழக்கத்திற்கு அடிமையாகுவோர் பலர். இதை ஊட்டி வளர்ப்பது, விளம்பரக் கலாசாரம். கவர்ச்சியான விளம்பரங்கள் மட்டுமல்ல, மக்களின் அடிமனதில் சூழ்ச்சியாகச் செல்வாக்குச் செலுத்தி மக்களை மயக்கிவிடும் விளம்பரங்களால் கவரப்பட்டுக் கொள்வனவு செய்வோர் பலர்.

மூன்றாவது, முகநூல்ப் பயித்தியங்கள் பலர் சுய விளம்பரம் செய்கிறார்கள். தங்களைத் தாங்களே விற்கிறார்கள். Ego (ஈகோ) வின் வளர்ச்சி இனியில்லையென்ற அளவிற்கு வளர்ந்து விட்டன. குருக்கள், துறவிகள் விதிவிலக்கல்ல.

நான்காவது: கல்வி வணிகமாகி விட்டது. மருத்துவம் வணிகமாகிவிட்டது. இதனுள் விழுவோர் படித்தவர்கள், பதவிகளில் இருப்போர் சமயத்துள்கூட வணிகம் தோன்றிவிட்டது.

ஐந்தாவது: எங்கும் பொருள் முதல்வாதம் (Materialisam), பதவி ஆசை, அதிகார ஆசை போன்றவையும் பொருள் முதல் வாதந்தான். இவற்றையெல்லாம் உள்வாங்கிய சொல்தான் “உலகப் போக்கு”.

## சவால்

“நீங்கள் உலகைச் சார்ந்தவர்களல்ல” (யோவான் 16:19). நீங்கள் உலகில்தான் இருக்கிறீர்கள். சந்தேகமில்லை. ஆனால் உலகம் உங்களை உறிஞ்சிவிடக் கூடாது உறிஞ்சவிடக்கூடா. உலகத்தின் போக்கில் அமிழ்ந்து விடாதீர்கள். இதுதான் எதிர்நீச்சல். இவ்வாறு வாழ, மனம் மாறவேண்டும். மனித வளர்ச்சி அடையவேண்டும். “உலகப் போக்கில்” வாழ்வோர் தங்கள் தனித் தன்மையை இழந்துவிட்டார்கள். அவர்கள் மந்தையோடு மந்தையாகி மாக்களாக்கி விட்டார்கள்.

**உனது பாவங்களை**
**ஏற்றுக் கொள்ளாது**
**உனது பாவ நிலையை**
**ஏற்றுக் கொள்ளாது**
**மனம் மாறாமல்,**
**விபூதி பூசி பயன் என்ன?**
**சிலுவையின் பாதையில்**
**சிந்தித்தால் என்ன?**
**இயேசுவின் பாடுகளை**
**நினைத்து**
**அவருக்காக**
**நீ அழுதால் என்ன?**
**பயன் ஏதுமில்லை!**
**உன்னை மாற்று!!**

தவக்காலத்தில், இவ்வாறான ஒரு வாழ்க்கையை வாழாமல் உனது தனித்துவத்தைக் காப்பாற்று. இது மனமாற்றம். அதாவது, திருமுழுக்கு யோவான் கூறினார்: “பாவமன்னிப்பு அடைய மனம் மாறுங்கள்” அதாவது உங்கள் பாவங்களுக்கு மன்னிப்புக் கோராது, மனம் மாறாது திருமுழுக்குப் பெற முடியாது. இவரது குரல் கேட்டு, மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் அவரிடம் (திருமுழுக்கு யோவான்) திருமுழுக்குப் பெற்று வந்தார்கள். (மத் 3:6)

ஆனால், இரு கூட்டத்தினர் ஒரு குறுக்கு வழியைக் கையாள முற்பட்டனர். “பரிசேயர், சதுயேசர் பலர் தம்மிடம் திருமுழுக்குப் பெற வருவதைக் கண்டு அவர் அவர்களை நோக்கி, “விரியன் பாம்புக் குட்டிகளே! வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்? நீங்கள் மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்றபடி செயல்களால் காட்டுங்கள்” (மத். 2:8) திருமுழுக்கு யோவானின் வார்த்தைகளை விரித்துச் சொன்னால், தங்கள் பாவங்களை உணர்ந்து ஏற்றுக்கொள்ளாது, பாவ மன்னிப்புப் பெறாது, மனம் மாறாது. உங்கள் பாவச் செயல்களை நியாயப் படுத்தி வாழும் நீங்கள் திருமுழுக்குப் பெறுவதற்கு வராதீர்கள். எங்கள் ஊர்களில் இன்னமும் யாரையாவது திட்டும்பொழுது “புறம் போக்குகள் மண்ணாய்ப் போங்கள்”என்ற தொனி, திருமுழுக்கு யோவானின் சொற்களில் அவரது சினத்தில் (கோபத்தில்) தொனிக்கின்றது. அத்தோடு அவர் நிறுத்தி விடவில்லை. உண்மையிலேயே நீங்கள் மனம் மாறியவர்கள் என்று உங்களை நீங்களே நியாயப்படுத்தினால், உங்கள் மனமாற்றத்தின் விளைவாக செயல்களில் காட்டுங்கள். மக்களுக்கு நன்மை செய்கிறீர்களா? அவர்கள் மெல் சுமைகளை சுமத்தவில்லையா?

உங்களை நீங்களே நீதிமான்கள் என்று கூறுவதில்லையா? யாரை ஏமாற்றுகிறீர்கள்? உங்களை நீங்களே ஏமாற்றி வாழுகிறீர்களா? இந்நிலையில் இருந்து மனம் மாறுங்கள்.

திருமுழுக்கு யோவான் துணிந்தவர். அவர் ஒரு மாபெரும் இறைவாக்கினர் என்று இயேசுவே அவரை அடையாளங் காட்டினார். அவர், இன்று எங்கள் மத்தியில் வாழ்ந்தால், என்ன செய்வார்? “தவக்காலம் வந்தவுடன் நீங்கள் செய்வதென்ன” நெற்றியில் அழகு சாதனமாக சாம்பல் பூசுகிறீர்களா? சிலுவைப் பாதை செய்கிறீர்களா? நோன்பிருக்கிறீர்களா? திரு யாத்திரை செய்கின்றீர்களா? உங்கள் பாவச் செயல்களை ஏற்றுக்கொண்டு, உங்கள் பாவ நிலைகளை ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்புப் பெறாமல் மனம் மாறாமல் இந்தப் பக்தி முயற்சிகளில் மட்டுமே ஈடுபாடு கொண்டு, நீங்கள் அக விடுதலை அடைவீர்களென்று பகற் கனவு காணாதீர்கள். சடங்குகளுக்குப் பின்னால் ஒழிந்து கொண்டு, உங்களை நியாயப்படுத்தி வாழாதீர்கள்.

முதலில் உங்கள் பாவங்களை, பாவ நிலையை உணர்ந்து ஏற்றுக்கொண்டு மன்னிப்புப் பெற்று மனம் மாறுங்கள். அந்த மனமாற்றத்தின் விளைவுகளை மக்கள் பார்ப்பார்கள். உங்கள் பேச்சு மாறும், உரையாடல் மாறும், மக்களை மக்களாக மதிப்பீர்கள். நீதிக்காகக் குரல் கொடுப்பீர்கள், ஏழைகளைத் தூக்கி விடுவீர்கள், அனைத்து மக்களும் எங்கள் அயலவர்கள் என்று வளர்வீர்கள். சட்ட மனப்பான்மையில் இருந்தும், சடங்கு மனப்பான்மையிலிருந்தும மனம் மாறி சட்டங்களும் சடங்குகளும் மக்களுக்காக, மக்கள் அவற்றிற்காக வல்ல என்று பறைசாற்றி வாழ்வீர்கள். மற்றவர்களின் ஆன்மிகத்தை எடைபோடாதீர்கள். உங்களுக்கு அந்தப் பொறுப்பைத் தந்தவர்கள் யார்? புறத்தே திருயாத்திரை செய்ய முன்னர், உங்கள் அகத்தே திருயாத்திரை செய்வீர்கள். அந்தத் திருயாத்திரையில் “மோட்ச இராச்சியத்தை” அனுபவிப்பீர்கள். இந்த மோட்ச இராட்சியம் என்ன…?

# திரைகளிலிருந்து திருச்சிலுவை நோக்கிய எண்ணியல் நோன்பு

மத்தியூஸ் டியோனி BCA, MCA
ஆசிரியர் (இளவாலை)
தகவல் தொடர்பால் தொழில்நுட்பம்



**த**வக்காலம் என்பது கிறிஸ்தவ வாழ்வின் ஆன்மீகப் புதுப்பித்தலுக்குரிய வசந்தகாலமாகும் “நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்” என்ற எச்சரிக்கையோடு தொடங்கும் இக்காலம் நம்மை இறைவனோடும் பிறரோடும் ஒப்புரவாக அழைக்கின்றது. இன்றைய நவீன உலகில் நமதுயகயக சமுகத்தொடர்புகள் அனைத்தும் மின்னணுத்திரைக்குள் சுருங்கிவிட்ட சூழலில் உண்மையான ஆன்மீகப் பயணம் என்பது எமது எண்ணியல் (Digital) பழக்க வழக்கங்களைச் சீரமைப்பதிலே தொடங்க வேணடும். கத்தோலிக்க திருஅவை யானது சமூகத்தொடர்புகளை இறைவனின் கொடையாகக் கருது கிறது. அதனாலேயே இவ்வாண்டு யாழ் திருஅவை சமுகத்தொடர்புகள் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி இவ் மனமாற்றத்தின் காலத்தில் சமுகத்தொடர்புகளை ஒறுத்தல்கள் வழியாகச் செம்மைப்படுத்த அழைக் கிறது. இத்தவக்காலத்தில் பாரம்பரியமாக நாம் உணவு,பொழுதுபோக்கு போன்றவற்றில் ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைய சமுகத்தொடர்புகள் நிறைந்த எண்ணியல் உலகில் நமது ஆன்மீக மாற்றத்திற்கு சில கட்டுப்பாடான ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொள்ள நாம் தயாராக வேண்டியிருக்கிறது.

**எண்ணியல் நோன்பு** (Digital Fasting)

மனமாற்றத்தின் காலத்தில் நாம் வழமையாகக் கடைப்பிடிக்கும் ஒறுத்தல் முயற்சிகளைப் போன்றே தற்காலச்சமூகம் மூழ்கிப்போயுள்ள அலைபேசி திரைப் பயன்பாட்டை (Screen Time) குறைப்பதே இதுவாகும். எமது நேரத்தை மிக வேகமாக விழுங்குவதில் சமூக ஊடகங்கள் முன்னிலை வகிக்கின்றன.

எண்ணியல் நோன்பினை எவ்வாறு மேற்கொள்ளலாம்?

◆ தேவையற்ற சமூக வலைத்தளப் பயன்பாட்டைக் குறைத்து அந்த நேரத்தை செபம் மற்றும் விவிலிய வாசிப்புக்காக பயன்படுத்தலாம்

◆ வாரத்தில் ஒருநாள் அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தை சமூக ஊடகப் பாவனையற்ற நேரமாக (Screen Media Free Time) வீட்டில் அறிவிக்கலாம்

◆ குறிப்பிட்ட நேரத்திற்கு இணையத்தைத் துண்டித்து விட்டு (Internet Fasting) அந்த நேரத்தைக் குடும்ப உறுப்பினர்களுடன் உரையாடப் பயன்படுத்தலாம்

◆ *தவக்காலத்தில்* வெள்ளிக்கிழமைகளில் சமூக வலைத்தளங்களிலிருந்து விலகி சிலுவைப்பாதைத் தியானம், நற்கருணை ஆராதனை, விவிலியம் வாசித்தல் போன்ற ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொள்ளலாம்

இலௌவீகங்கள் பெருகிப்போன இவ் யுகத்தில் மனதினைக் கட்டுப்படுத்தல் என்பது கடினமான விடயமொன்றாக காணப்படினும் இறைவன் எமக்களித்த சமுகத்தொடர்பாடல் ஆண்டில் இவ் ஆன்மீகத் தியாகத்தைச் செய்ய முயற்சிப்போம் எண்ணியல் அறநெறி - நாவடக்கம் மற்றும் விரலடக்கம் “தாம் சமயப்பற்றுடையோர் என எண்ணிக் கொண்டிருப்போர் தம் நாவை அடக்காமலிருப்பாரென்றால் தம்மையே ஏமாற்றி கொள்வர் இத்தைகையோருடைய சமயப் பற்று பயனற்றது” யாக்கோபு(1.26)

இன்றைய சூழலில் நமது நாக்கு மின்னணுத்திரையின் விசைப்பலகையாக மாறியிருக்கிறது. யாக்கோபு திருத்தூதர் கூறுவது போல மனித நாவானது மனித வாழ்க்கையையே மாற்றிப் போட்டுவிடக் கூடியது. சமுக வலைத்தளங்களிலே நாம் பகிரும் செய்திகள், பதிவிடும் கருத்துக்கள் பல நேரங்களில் பலரின் மனதைக் காயப்படுத்துகின்றன, வதந்திகள் பரவக் காரணமாக அமைகின்றன எண்ணியல் அறநெறியை எவ்வாறு கடைப்பிடிக்கலாம்?

◆ மற்றவர்களைப்பற்றி அவதூறு பரப்புதல்,கிண்டல் செய்தல் அல்லது எதிர்மறையான கருத்துக்களை சமுக வலைத்தளங்களிலே பகிராமல் இருத்தல்

◆ ஒரு தகவலைப் பகிர முன் அது உண்மையானதா? அந்தத் தகவல் இப்போது தேவையானது தானா? என்பதனை சிந்தித்து செயற்படலாம்

◆ பிறரைப்பற்றிப் புறணி பேசாமலும் விமர்சிக்காமலும் கோபத்தைத் தூண்டும் விவாதங்களில் ஈடுபடாமலும் மௌனம் காத்துக்கொள்ளலாம்

◆ தவக்காலத்திலே ஒருவரைப்பற்றித் தவறாகப் பதிவிடத்தோன்றும் போது அதைத் தவிர்த்து அவருக்காக ஒரு பரலோகமந்திரம் சொல்லலாம் எதிர்மறையான கருத்துக்களைப் பரப்பி, பிறரின் வீழ்ச்சியில் மகிழத்துடிக்கின்ற காலத்திலே அன்னையாம் திருஅவை எம்மை அழைத்து நிற்கும் இவ் சமூகத் தொடர்பாடல் ஆண்டிலே எம் கருத்துப்பதிவுகளாலே பிறரின் ஆன்மாவைக் கொல்கின்ற ஆன்மீகக் கொலையாளியாக இல்லாது எண்ணியல் அறநெறி கொண்ட மனிதராக வாழ எத்தனிப்போம்.

**இறைவனின் அலைவரிசை - அகஅமைதி**

“நிலநடுக்கத்திற்குப் பின் தீ கிளம்பிற்று. தீயிலும் ஆண்டவர் இருக்கவில்லை. தீக்குப்பின் அடக்கமான மெல்லிய ஒலி கேட்டது” (1அரசர்கள் 19:12) இறைவன் இடியிலும் மின்னலிலும் இல்லை அவர் மெல்லிய காற்றில் இருக்கிறார். இரைச்சல் மிகுந்த உலகில் இறைவனின் குரலைக் கேட்க அக அமைதி தேவை. இலத்திரனியல் சாதனங்களின் தொடர்ச்சியான இரைச்சல்களினால் இறைவனின் குரலைக் கேட்கும் அலைவரிசைக்குள் எம்மால் நுழைய முடியவில்லை. அவரின் அலைவரிசைக்குள் பிரவேசிக்க எமது ஐம்புலன்களையும் கட்டுப்படுத்திய மெய்மறந்த அமைதியான தியானம் வேண்டும்.

**இறைவனின் அலைவரிசைக்குள் எவ்வாறு நுழையலாம்?**

◆ தினமும் குறைந்தளவு நேரமாவது எந்த மின்னணுசாதனமும் இல்லாமல் அமைதியாக அமர்ந்து தியானிக்கலாம்

◆ அனைத்து விதமான திரைகளிலிருந்தும் விலகி அலைபேசியை அணைத்துவைத்துக் குறிப்பிட்ட நேரத்திலே இறைவார்த்தைகளை தியானிப்பதன் ஊடாக இறைவனின் குரலைக் கேட்கலாம்

◆ தவக்காலத்திலே இரவிலே தூங்குவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னரும் காலையிலே எழுந்தவுடன் அரைமணி நேரத்திற்கும் அலைபேசியை பயன்படுத்தாது கண்களை மூடி இயேசுவின் திருப்பாடுகளைத் தியானிக்கலாம்.

பூகோளமயமாதல் என்ற நவீன உலகில் தொழில்முறைத் தேவைகளுக்குத் தொடர்பாடல் சாதனங்கள் இன்றியமையாததொன்றாகிவிட்ட காலத்திலே அவற்றிலிருந்து விலகி இருத்தலென்பது சில பாதக விளைவுகளையும் எமக்கு ஏற்படுத்தக்கூடும் எனவே அவற்றைச் சரியாகக் கையாண்டு இவ் ஒறுத்தல் முயற்சிகளைக் கடைப்பிடிக்க முயற்சிப்போம்.

திரையைத் தாண்டிய அன்பு - “உறவுகளின் மீட்சி” இயேசு சமாரியப் பெண்ணுடன் கிணற்றடியில் அமர்ந்து நேருக்கு நேர் பேசினார். அவர் தூரத்திலிருந்து கட்டளையிடவில்லை. சமூக ஊடகங்கள் நம்மைத் தூரத்திலிருப்பவர்களுடன் இணைக்கின்றன. ஆனால் அருகிலிருப்பவரிடமிருந்து பிரித்து விடுகின்றன. நாம் ஒரே வீட்டில் ஒரே குடும்பமாக வாழ்ந்தாலும் நம் கைகளிலே தவழுகின்ற திரைகள் நம்மைத் தனித்தனியாகப் பிரித்து விட்டிருக்கின்றன

***திரையைத்தாண்டி எவ்வாறு அன்பு செய்யலாம்?***

◆ முகநூல் நண்பர்களைவிட முகத்திற்கு நேராகச் சந்தித்து பேசும் உறவுகளுக்கு முன்னுரிமை கொடுக்கலாம்

◆குடும்பமாக உணவு மேசைக்குச்சென்று அலைபேசிப் பாவனை இல்லாது உணவருந்தலாம்

◆ நீண்ட நாட்களாகப் பேசாமல் தொடர்பற்று போயிருக்கும் உறவினர் நண்பர்களைத் தொலைபேசியில் அழைத்து அன்பு பாராட்டலாம்

◆ தனிமையில் துயரத்தில் வாடும் உறவினருக்கோ நண்பருக்கோ ஆறுதல் வார்த்தைகளாலான குறுஞ்செய்தி அனுப்பி அவர்களைத் திடப்படுத்தலாம்

◆ தவக்காலத்தில் பிறருக்கு வெறுப்புணர்வைத் தூண்டும் மன விரக்தியை ஏற்படுத்தும் பதிவுகளை சமுக வலைத்தளங்களிலே பகிராமல் நம்பிக்கை,அன்பு போன்றவற்றை வலுப்படுத்தும் நற்செய்திகளைப் பகிரலாம்.

சமுகஊடகத்தொடர்பு என்பது வெறும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்ல. அது ஒரு அன்புப்பரிமாற்றம். கடல் தாண்டிக் காகிதக் கடிதத்திலே வந்த “நாங்கள் நலம் நீங்கள் அனைவரும் நலமா?” என்ற எழுத்துவரிகளின் உணர்வு மின்னணு சாதனத்தில் பரிமாறப்படும் குறுஞ்செய்தி யில் இல்லாமலிருக்கலாம். உறவுகளின் சீர்ப்படுத்தலை மேற் கொள்ளும் காலமாகிய தவக்காலத்திலே திரையைத்தாண்டிய அன்பின் மூலம் உறவுகளைப் பலப்படுத்த முனைவோம்.

**எண்ணியல் சேமிப்பு (Digital Savings) தர்மமும் பகிர்வும்**

சமுக வலைத்களங்களிலே பெரும்பாலும் பகட்டான வாழ்வியல் முறைகளின் பதிவுகளே புரையோடிப்போய்க் கிடக்கிறது. இணையவழிக் கொள்வனவு மோகம் அதிகரித்து வருகிறது. திரையிலே வந்து போகும் கண்கவர் விளம்பரங்கள்இணையச் செயலி நுகர்வுகளைத் தூண்டுகின்றன. இணையத்தரவுக்காக எம்மையறியாமலே பணத்தைச் செலவு செய்கிறோம். இவ்வாறு தேவையற்ற பாவனையால் கரையும் பணம் ஒரு ஏழையின் ஒருமாத உணவாகக் கூட இருக்கலாம் எண்ணியல் சேமிப்பை எவ்வாறு பகிரலாம்?

◆ தேவையற்ற இணையப் பாவனையை நிறுத்தி அச் செலவை ஒரு ஏழை மாணவனின் கற்றலுக்கு உதவலாம்.

◆ இணையச்செயலிகளில் தேவையற்ற கொள்வனவுகளைத் தவிர்த்துச் சிறையில் வாடும் ஒருவருக்கு உதவலாம்

◆ தவக்காலத்தில் ஆடம்பரக் கொள்வனவு விளம் பரங்களைப் பகிராமலும் ஏனையோரைப் போலி ஒப்பீடுகளுக்குத் தூண்டாமலும் தவிர்க்கலாம்.

இணையவழி நுகர்வு என்பது இலகுவானதாகவும் நேர விரயமற்றதாவும் இருந்தாலும் அதில் வருகின்ற தொடர் விளம் பரங்கள் மீண்டும் மீண்டும் நுகரத் தூண்டுவனவாகவே அமைகின்றன. ஒரு நேர வயிற்றுப் பிழைப்புக்காக சிறுவணிகங்களை தெருவோரங்களில் நடாத்தும் எளியோரின் கடைகளிலே இத் தவக்காலத்திலே நுகருவோம், அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவோம். அவர்களோடு தொடர்புகளைப் பேணுவோம்.

**சமூக ஊடகங்களின் புனிதப் பயன்பாடு**

சமூக ஊடகத்தொடர்பு என்பது தீயது அல்ல,அதை நாம் பயன்படுத்தும் விதத்திலேயே அதன் மதிப்பு உள்ளது. “உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” என்ற கட்டளையை நிறைவேற்ற தற்காலத்திலே இது ஒரு நவீன மேடையாகும். 2014 ம் ஆண்டு உலகத் தகவல் தொடர்பு நாள் செய்தியிலே திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்கள் கூறியது போல “எண்ணியல் உலகம் (Digital World) என்பது வெறும் தொழில்நுட்பம் அல்ல அது ஒரு மேய்ப்புப் பணித்தளம்” அதனால் அவற்றை தீய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தாமல் கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றும் சமுக ஊடகமாக மாற்றவேண்டும்

◆ சுய விளம்பரங்களைத் தவிர்த்து கிறிஸ்துவின் அன்பை விளம்பரப்படுத்தலாம்.


◆ இயலுமான வரையில் ஒரு வேதாகம வார்த்தையையோ அல்லது ஒரு புனிதரின் வாழ்வையோ உங்கள் சமூக ஊடகங்களில் பதிவாக இட்டு மற்றவர்களுக்கு ஆன்மீக தூண்டுதலாக இருக்கலாம்.

சமூக ஊடகத்தொடர்பு என்பது இறைவனின் கொடை அதை தவக்காலத்தில் முறையாகப் பயன் படுத்துவதும் தேவைப்படும் இடங்களில் அதைக்கட்டுப் படுத்துவதும் ஒரு சிறந்த பலியாகும். நம்மை நாமே ஒறுத்து கிறிஸ்துவை நமக்குள் வளர்க்கும் இக்காலத்தில் எண்ணியல் நோன்பும் எம் மனமாற்றத்திற்கான ஒரு கருவியாக அமையட்டும். மின்னணுத்திரைகளுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளாமல் பொது வெளியில் உண்மை முகம் கொண்ட மனிதனாக வாழ முற்படுவோம். சமூக தொடர்பாடல் ஆண்டில் சமுக ஊடகங்களிலிருந்து நம்மைத் துண்டிக்கச் சொல்லவில்லை. மாறாக அவை நம்மை அடிமையாக்காமல் அவற்றை நாம் ஆளக்கற்றுக் கொள்ள வேண்டும். சமூக ஊடகங்கள் நல்லதொரு சமூகத் தொடர்பாடலைக் கட்டியெழுப்ப வேண்டும். மின்னணு திரையில் தோன்றும்

**விம்பங்களைவிட மண்ணவர்க்காய் சிலுவையில் தொங்கிய இயேசுவின் விம்பம் நம் மனதில் ஆழமாய்ப் பதிய வேண்டும். அதற்காய் இவ் எண்ணியல் நோன்புமுயற்சிகளை சிறுகச்சிறுக எத்தனிப்போம்.**

# அன்பின் மகிழ்வு

## சமூகத் தொடர்பாடல் ஆண்டு



அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

# இவ்வாண்டில் அர்த்தமுள்ள தொடர்பாடலின் பண்பாட்டை கட்டியெழுப்புவோம்

(சென்ற இதழின் தொடர்ச்சி..)

**3] இந்த ஆண்டின் நோக்கம் என்ன?**

***1) உண்மையை நேசிக்கும் தொடர்பாடல்***

இந்த ஆண்டின் முதல் நோக்கம், உண்மையை நேசிக்கும் தொடர்பாடலை வளர்ப்பதாகும். கிறிஸ்தவ விசுவாசத்தில் உண்மை என்பது ஒரு “கருத்து” மட்டும் அல்ல. அது கடவுளின் ஒளி, மனசாட்சியை வழிநடத்தும் பாதை. நாம் நம்பும் இறைவன் “உண்மை”யின் கடவுள். ஆகவே நம் சொற்களும் பதிவுக-ளும் உண்மைக்கு சேவை செய்ய வேண்டும்.

இதன் பொருள், வதந்தியைப் பகிராமல் நிறுத்துவது, உறுதி செய்யாமல் பேசாமல் இருப்பது, மற்றவரின் நல்லபெயரைப் பாது காப்பது, தவறாகச் சொன்னால் திருத்தி மன்னிப்புக் கேட்பது. அவசர மாகச் சொல்லப்படும் வார்த்தை பல நேரம் நீதியைக் காயப்படுத்துகிறது. ஆனால் பொறுப்புடன் பேசப்படும் சொல் நம்பிக்கையைக் கட்டுகிறது. எனவே இந்த ஆண்டு, “என் வார்த்தை உண்மையா? அது நியாயமானதா? அது பிறரின் கண்ணியத்தைக் காக்கிறதா?” என்று மனசாட்சியோடு சோதிக்கும் பழக்கத்தை நாம் வளர்ப்போம்.

**2) மரியாதையைக் காக்கும் தொடர்பாடல்**

இரண்டாவது நோக்கம், மரியாதையைக் காக்கும் தொடர்பாடல். ஒவ்வொரு மனிதனும் கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டவர் என்பதே கிறிஸ்தவ நம்பிக்கை. அதனால் ஒருவரை “எதிர-ணி” என்று அல்ல, “சகோதரர், சகோதரி” என்று பார்க்கும் பார்வை நம் தொடர்பாடலை வழிநடத்த வேண்டும். கடுமை உண்மையைச் சொல்லலாம், ஆனால் அது இதயத்தை உடைக்கவும் முடியும். கண்ணி யம் உண்மையைச் சொல்லியும் உறவை பாதுகாக்கும். கிண்டல் சிரிப்பாகத் தோன்றலாம், ஆனால் அது உள்ளத்தில் ஆழமான காயங்களை ஏற்படுத்தலாம் கருணை மட்டும் தான் மனிதரைத் தூக்கும். ஆகவே இந்த ஆண்டு, நம் சொற்கள் மென்மையாக இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல, நம் சொற்கள் கிறிஸ்துவின் மனநிலையைப் பிரதி-பலிக்க வேண்டும் என்பதற்காக நாம் பயிற்சி எடுப்போம். “நான் பேசுவது பிறரின் மரியாதையை உயர்த்துகி-றதா?” என்ற கேள்வி நம் உள்ளத்தில் நிலைத்திருக்-கட்டும்.

**3) ஒன்றிப்பைக் கட்டியெழுப்பும் தொடர்பாடல்**

மூன்றாவது நோக்கம், ஒன்றிப்பை கட்டி-யெழுப்பும் தொடர்பாடல். திருச்சபை என்றால் கிறிஸ்-துவின் உடல் குடும்பம் என்றால் “சிறிய திருச்சபை” சமுதாயம் என்றால் ஒருவருக்கொருவர் பொறுப்புள்ள சகோதரத்துவம். இந்த மூன்றிலும் ஒன்றிப்பை கட்டு வதற்கு சொல் ஒரு பெரிய கருவி. உடைக்கும் சொல் எளிதாக வருகிறது, ஆனால் இணைக்கும் சொல் தியாகம் கேட்கிறது: கேட்பதற்கான பொறுமை, புரிந்து கொள்ளும் மனம், மன்னிக்கும் ஆவி, சமாதானத் தைத் தேடும் துணிச்சல். பிளவை உருவாக்குவது பல நேரம் “நியாயம் பேசுகிறேன்” என்ற பெயரில் நடக்கும் ஆனால் நற்செய்தி நமக்குக் கற்றுக்கொடுத்தது, உண்மையையும் அன்பையும் பிரிக்காமல் ஒன்றாக வாழ்வதே. எனவே இந்த ஆண்டு, நாம் சமாதானத்தின் மனிதர்களாக வளர வேண்டும்: குழப்பத்தைப் பெருக்கும் செய்திகளை அல்ல, நம்பிக்கையைக் கட்டும் செய்திகளைப் பகிர்வோம் கோபத்தை அல்ல, சமரசத்தை வளர்ப்போம் விலகலை அல்ல, ஒன்றிப்பை உருவாக்குவோம்.

**சுருக்கமான முடிவுரை**

அதனால், இந்த ஆண்டு முழுவதும் நாம் “சொற்கள்” பற்றியே பேசவில்லை. சொற்களின் வழியாக உருவாகும் உறவுகள், ஒன்றிப்பு, மரியாதை, நற்செய்-தியின் சாட்சி ஆகியவற்றை வளர்ப்பதற்காகவே நாம் பயணம் செய்வோம். எங்கள் வார்த்தைகள் காயப்படுத்த அல்ல, குணப்படுத்த. பிரிக்க அல்ல, இணைக்க. இருளைப் பெருக்க அல்ல, ஒளியை வழங்க. ஆண்டவர் நமக்கு அருள்வாராக, பரிசுத்த ஆவி நம் நாவையும் நம் இதயத்தையும் வழிநடத்துவாராக. அப்போது நம் குடும்பங்களில் அமைதி வளரும், பங்குச் சமூகங்களில் ஒன்றிப்பு வலுப்படும், சமுதாயத்தில் மனித மரியாதை உயர்த்தப்படும் மற்றும் நம் தொடர்பாடலே நற்செய்தியின் அழகான சாட்சியாக மாறும். ●

---

# கிறிஸ்துவில் வேரூன்ற அழைக்கும் தவக்காலம்!



அருட்பணி எஸ்.ஏ.ஆனந்த்

ஆணவம், அகந்தை, அலட்சி யம், அச்சம் ஆகியவை ஆதிக்கம் செலுத்தும் இக் காலகட்டத்தில், நாம் தவக்காலத்தில் அடியெடுத்து வைக்கி-ன்றோம். அன்பையும் அமைதியையும் வாழ்வின் வழியாகக் கொண்ட கிறிஸ்து வில் வேரூன்ற அழைக்கும் இத்தவக் காலம், நம் அழுக்குச் சிந்தளைகளைக் களைந்து அர்த்தமுள்ள வாழ்வுக்கு வழிகாட்டுகிறது. இறைவேண்டல், நோன்பு, அறப் பணிகள் போன்ற நல்ல பண்புகள கிறிஸ்துவில் வேரூன்று, இத்தவக்காலம் துணையாக இருக்கும்.

**1. இறைவேண்டல்**

அன்றாட வாழ்வின் சத்தத்தில் மூழ் கியிருக்கும் இறைவனின் குரலை மீண்டும் கேட்க நம் இதயத்தைத் திறக்கிறது. எனவே அமைதியில் ஆழப்பட வேண்டியது நமது கட்டாயக் கடமையாகிறது.

“இறைவேண்டல் என்பது ஆன்மா வின் அகக் குளியல்” என்கிறார் புனித அகுஸ்தினார். ஆன்ம சோதனை செய்வது மிகவும் அவசியம். இறை வேண்டல் என்பது எல்லா நேரங்க-ளிலும் உதடுகளால் செபங்களை உச்சரித்துக் கொண்டிருப்பது அல்ல, மாறாக, தியானங் கள் வழியாக நம்முடைய இதயத்தைச் சுய ஆய்வுக்கு உட்படுத்துகிற ஒரு காலம் என் பதை இத்தருணங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுகளைப் போலவே இறைவேண்டல் அமையவேண் டும் என்பது அவசியம் இல்லை. இறை வேண்டல் நேரங்கள் இறைக்குரல் கேட்கும் தருணங்களாக மாறவேண்டும். இத்தரு ணங்கள் இறைவளோடு ஒன்றிணையும் தருணங்கள் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். அமைதியில் நாம் தவழும்போது நமது குறைகளையும், நிறைகளையும் இறைவன் நம் கண்முன் கொண்டுவந்து, சரி செய்பவற்றை அவர் சரி செய்கிறார் களை-பவற்றைக் களைகிறார். “இறைவனோடு நாம் ஒன்றிணையும் பொழுது நம்மில் நல்ல பண்புகள் வளர்கின்றன. பாவங்கள் களையப்படுகின்றன, கோபம் விலகுகி-றது: கருணை பிறக்கிறது” என்கிறார் புனித பிரான்சிஸ் தே சேல்ஸ். ”இறைவனோடு ஒன்றிணையாத வாழ்வு, கடலில் இருந்து கரைக்கு வந்த மீனுக்குச் சமம்” என்கி-றார் புனித ஜான் கிறிஸ்தோஸ்தம், உலகம் காட்டக்கூடிய கவர்ச்சிகள் அனைத்தும் கானல் நீர் என்பதை உணர்த்துகிற இந்தக் காலத்தில் இறைவனோடு ஒன்றிணையும் நேரங்களை நாம் அதிகப்படுத்திக்கொள் வோம். நம்மைப் பல நேரங்களில் தனிமைப் படுத்தி அன்றாடம் தாங்குகிற கடவுளின் தரிசனத்தைக் காண்டோம்.

**2. நோன்பு**

இக்காலகட்டத்தில் வெளிப்புற உடல் நலத் தைப் பேணுவதில் அதிக அக்கறை காட்டப்படு வதைப் பார்க்க முடிகிறது. உடல் எனடனயக் குறைக் ம் காலமாகவும் இந்தத் தவக்காலத்தைச் சிலர் தவறாகப் பயன்படுத் திக்கொள்கிறார்கள். தவக்காலத்தில் பலர், மது அருந்தாமல் இருப்பது, புகை பிடிக் காமல் இருப்பது என்று தாறப்பது தாள்கள் கடைப்பிடிக்கிறார்கள். ஆனால், அதற்குப் பிறகு தங்கள் பழைய வாழ்க்கைக்குக் கடந்து செல்கிறார்கள். நமது வாழ்விலே பல வியத்தகு செயல்களை அனுபவிக்க இறைவேண்டலோடு கூடிய நோன்பும் தேவைப்படுகிறது,

தீய ஆற்றலால் நாம் பாதிக்கப்படும் பொழுது இயேசுவின் வார்த்தைகளைக் கானத்தில் கொள்வோம், இவ்வகைப் பேய், இறைவேண்டலினாலும் நோன்பினாலு மேயன்றி, வேறு எதனாலும் வெளியேறாது” என்றார் இயேசு (மத் 17:21), ஆன்மாவின் அகக் குளியலுக்கும் தூய் மைக்கும் இந்த நோன்பு அத்தியாவசிய தேவையாக இருக்கிறது என்பதை உணர வைக்கிற காலம். இந்தத் தவக்காலம், ஒரு காலத்தில் கத்தோலிக்கக் கிறித்தவர் கள் வெள்ளிக்கிழமை தோறும் நோன்பு இருப்பார்கள். ஆனால், இப்பொழுது பல் வேறு நோய்களால் பலர் பாதிக்கப்பட்டி ருப்பதால் மருத்துவரின் ஆலோசனைப் படி, அவர்கள் நோன்பு இருக்க முடியாத சூழ்நிலை, ஆனாலும், சற்று ஆரோக் கியமாக இருப்பவர்கள் கண்டிப்பாக வாழ்விலே இலக்கோடு பயணிப்பதற்கும். இறைவளோடு ஒன்றிணைவ தற்கும் நோன்பு என்பது கட்டாயம் தேவை என்பதை உணா வேண்டும்.

**3. தர்மம் அல்லது அறப்பணிகள்**

“நான் உண்மீது அன்பு செய்து வருகி றேன்” என்கிற திருத்தூது ஊக்கவுரை யில் திருத்தந்தை லியோ அவர்கள் அறப்பணிகளைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகிறார். ஏழை எளிய மக்கள். கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்றும், அவர்களே நற்செய்திப் பணியின் கதா நாயகர்கள் என்றும் குறிப்பிடுகிறார். திருவழிபாட்டில் நாம் ஏறெடுக்கும் இறைவேண்டல்கள் விண்ணகத்தைச் சென்றுசேர வேண்டுமென்றால் நாம் கொடுக்கக்கூடிய நான தர்மங்கள் அதன் சிறகுகளாக அமைந்தால் மட்டுமே விண்னாகத்தைச் சேரமுடியும் என் பதைத் திருத்தந்தை பெரிய கிரகோரியா ரின் எழுத்துகளில் பதிவிடுகிறார், “தானம் செய்வது நீதிக்குத் தலைவணங்குவதா-கும்” என்கிறார் புனித அம்புரோஸ், உடைமைகள் இழந்தவர்கள், உரிமை-களை இழந்தவர்கள், சுதந்திரத்தை இழந்தவர்கள், குரலற்ற வர்கள், விளிம்புநிலையில் இருப்போர்,

(தொடர்ச்சி 7ம் பக்.)

# யாழ் மறைமாவட்ட பங்குகளின் விசேட நிதி சேகரிப்பு - 2024

| இல | பங்கு | திருப் பாலத்துவ தினம் | பரிசுத்த வாரம் | இறை அழைத்தல் தினம் | பாப்பரசர் தினம் | சுதேச குருக்கள் தினம் | மறைபரப்பு ஞாயிறு | நல்லாயன் நிதியம் | கிறிஸ்மஸ் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **யாழ்ப்பாணம் மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | பேராலயம் | 55000.00 | 140000.00 | 56100.00 | 56000.00 | 54000.00 | 414700.00 | 50000.00 | 95000.00 |
| 2. | குருநகர் | 63310.00 | 125000.00 | 45000.00 | 40800.00 | 36580.00 | 201240.00 | 84990.00 | 75000.00 |
| 3. | அடைக்கல அன்னை ஆலயம் | 30220.00 | 44940.00 | 36610.00 | 35000.00 | 45000.00 | 37930.00 | 40360.00 | 38624.00 |
| 4. | பாஷையூர் | 37500.00 | 135000.00 | 37700.00 | 32000.00 | 25000.00 | 57700.00 | 40000.00 | 43500.00 |
| 5. | நாவாந்துறை | 20670.00 | 48800.00 | 25000.00 | 17000.00 | 50000.00 | 60000.00 | 33000.00 | 48000.00 |
| 6. | அஞ்சனந்தாழ்வு | 4550.00 | 13300.00 | 4160.00 | 3850.00 | 4770.00 | 4100.00 | 3000.00 | 5500.00 |
| 7. | பண்டியன்தாழ்வு | 12000.00 | 32000.00 | 12000.00 | 4000.00 | 9000.00 | 24512.00 | 11420.00 | 24000.00 |
| 8. | கொழும்புத்துறை | 12000.00 | 22800.00 | 15000.00 | 6000.00 | 10970.00 | 15000.00 | 15500.00 | 15000.00 |
| 9. | கொய்யாத்தோட்டம் | 6300.00 | 10300.00 | 7000.00 | 4000.00 | 3200.00 | 12200.00 | 7200.00 | 5540.00 |
| 10. | கோப்பாய் - திருநெல்வேலி | 23200.00 | 26000.00 | 4000.00 | 14200.00 | 14470.00 | 15000.00 | 11000.00 | 15000.00 |
| 11. | சுண்டிக்குளி | 13625.00 | 30600.00 | 2500.00 | 6000.00 | 14750.00 | 154970.00 | 61010.00 | 20000.00 |
| 12. | நல்லூர் | 5000.00 | 21600.00 | 5000.00 | 5000.00 | 7200.00 | 10000.00 | 12000.00 | 10000.00 |
| 13. | மணியந்தோட்டம் | 14000.00 | 23000.00 | 10500.00 | 9000.00 | 10500.00 | 20000.00 | 7500.00 | 16000.00 |
| 14. | திரேசாள் ஆலயம்-றக்கா வீதி | 21875.00 | 17850.00 | 2500.00 | 5000.00 | 17000.00 | 14000.00 | 22000.00 | 10000.00 |
| | **தீவகம் மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | மண்டைதீவு | 11930.00 | 46182.00 | 12000.00 | 10430.00 | 22020.00 | 20560.00 | 7020.00 | 15760.00 |
| 2. | கரம்பன் | 5000.00 | 7000.00 | 4000.00 | 6000.00 | 3000.00 | 6000.00 | 5000.00 | 10000.00 |
| 3. | நாரந்தனை | 11300.00 | 28250.00 | 7200.00 | 4050.00 | 11150.00 | 45100.00 | 36500.00 | 21100.00 |
| 4. | ஊர்காவற்துறை | 10000.00 | 11000.00 | | 10000.00 | 9500.00 | 20000.00 | 25750.00 | 10000.00 |
| 5. | நெடுந்தீவு | 40000.00 | 15000.00 | 10000.00 | 40000.00 | 40000.00 | 41000.00 | 80000.00 | 15500.00 |
| 6. | சாட்டி - வெண்புறவிநகர் | | 19000.00 | 8000.00 | 8000.00 | 9000.00 | 12000.00 | 14000.00 | 11000.00 |
| 7. | புங்குடுதீவு | 6000.00 | 10000.00 | 5000.00 | 5000.00 | 6000.00 | 13150.00 | 5000.00 | 9000.00 |
| 8. | எழுவைதீவு | 10900.00 | 12000.00 | 12150.00 | 3000.00 | 15000.00 | 17000.00 | 5000.00 | 2000.00 |
| 9. | அல்லைப்பிட்டி | 7170.00 | 30880.00 | 8000.00 | 6000.00 | 7250.00 | 6220.00 | 6620.00 | 27450.00 |
| | **இளவாலை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | இளவாலை-அன்னம்மாள் பங்கு | 6580.00 | 31000.00 | 15100.00 | 5050.00 | 21650.00 | 10460.00 | 5340.00 | 18000.00 |
| 2. | இளவாலை-யாகப்பர் பங்கு | 4000.00 | 30200.00 | 2200.00 | 3000.00 | 3000.00 | 24000.00 | 6000.00 | 12000.00 |
| 3. | மாதகல் | 11000.00 | 23000.00 | 15000.00 | 5000.00 | 9800.00 | 42000.00 | 64340.00 | 10000.00 |
| 4. | சில்லாலை | 15440.00 | 35000.00 | 29440.00 | 11900.00 | 17500.00 | 168770.00 | | |
| 5. | பண்டத்தரிப்பு | 11330.00 | 30840.00 | 8500.00 | 7880.00 | 17000.00 | 13015.00 | 8900.00 | 24950.00 |
| 6. | விளான் | 18770.00 | 39500.00 | 33200.00 | 10500.00 | 12500.00 | 30000.00 | 10000.00 | 40000.00 |
| 7. | மானிப்பாய் | 45000.00 | 60500.00 | 41500.00 | 20000.00 | 27000.00 | 40000.00 | 30000.00 | 55000.00 |
| 8. | மாரீசன்கூடல் | 12500.00 | 33500.00 | 18000.00 | 8500.00 | 16500.00 | 27500.00 | 8500.00 | 25500.00 |
| 9. | உரும்பிராய் | 23250.00 | 53500.00 | 13000.00 | 17000.00 | 15000.00 | 40000.00 | 35000.00 | 35000.00 |
| 10. | ஆனைக்கோட்டை | 10000.00 | 60000.00 | 17000.00 | 10240.00 | 28300.00 | 170550.00 | 111600.00 | 34000.00 |
| 11. | குளமங்கால் | 8000.00 | 66000.00 | 13500.00 | | | 41170.00 | 16150.00 | 33606.00 |
| 12. | மல்வம் - உடுவில் | 17000.00 | 20000.00 | 8000.00 | 9000.00 | 10000.00 | 50000.00 | 50000.00 | 20000.00 |
| 13. | சுன்னாகம் | 12650.00 | 37830.00 | 11520.00 | 12250.00 | 8850.00 | 93000.00 | 10000.00 | 25500.00 |
| 14. | நவாலி | 4200.00 | 32500.00 | 13200.00 | 3500.00 | 2100.00 | 8350.00 | 7500.00 | 25000.00 |
| 15 | ஊறணி | 8000.00 | 22000.00 | 8000.00 | 6000.00 | 5560.00 | 3830.00 | 4000.00 | 12280.00 |
| | **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | பருத்தித்துறை | 36000.00 | 140000.00 | 30060.00 | 26550.00 | 34500.00 | 47500.00 | 26120.00 | 63120.00 |
| 2. | தாளையடி - செம்பியன்பற்று | 4600.00 | 7400.00 | 5050.00 | 3750.00 | 5850.00 | 72400.00 | 12000.00 | 7500.00 |
| 3. | அச்சுவேலி | 4500.00 | 20500.00 | 6000.00 | 4200.00 | 13000.00 | 24000.00 | 30000.00 | 12000.00 |
| 4. | கரவெட்டி | 22000.00 | 65000.00 | 31000.00 | 30000.00 | 35000.00 | 55000.00 | 146000.00 | 40000.00 |
| 5. | மிருசுவில் | 26000.00 | 62500.00 | 15180.00 | 15000.00 | 18000.00 | 50000.00 | 20360.00 | 35000.00 |
| 6. | சாவகச்சேரி | 5840.00 | 20280.00 | 6380.00 | 5920.00 | 7180.00 | 17460.00 | | |
| 7. | மணற்காடு | 8500.00 | 50000.00 | 9000.00 | 10000.00 | 10000.00 | 70000.00 | 10000.00 | 20000.00 |
| 8. | சக்கோட்டை | 9100.00 | 30800.00 | 7200.00 | 5400.00 | 7880.00 | 10580.00 | 7500.00 | 26080.00 |
| 9. | பளை, முகமாலை | 6000.00 | 28000.00 | 37000.00 | 7000.00 | 24000.00 | 40000.00 | 100000.00 | 20000.00 |
| 10. | கட்டைக்காடு | 6000.00 | 5000.00 | 5000.00 | 5000.00 | 5000.00 | 366260.00 | 45000.00 | 25000.00 |
| 11. | ஒட்டகப்புலம் | 4536.00 | 6000.00 | 2000.00 | 1565.00 | 6200.00 | 4500.00 | 1500.00 | 5000.00 |
| 12. | பலாலி | XXX | XXX | XXX | XXX | XXX | 19000.00 | 5000.00 | 16230.00 |
| | **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | கிளிநொச்சி | 12000.00 | 30000.00 | 11000.00 | 11500.00 | 12000.00 | 11000.00 | 10000.00 | 17000.00 |
| 2. | வலைப்பாடு | 20000.00 | 35000.00 | 19000.00 | 7000.00 | 8000.00 | 40000.00 | 17000.00 | 55000.00 |
| 3. | உருத்திரபுரம் | 5250.00 | 15000.00 | 5300.00 | 4000.00 | 5500.00 | 5200.00 | 40000.00 | 7000.00 |
| 4. | வட்டக்கச்சி | 5000.00 | 10000.00 | 4500.00 | 2500.00 | 4000.00 | 5700.00 | 4000.00 | 10000.00 |
| 5. | அக்கராயன் | 5600.00 | 12000.00 | 5000.00 | 5000.00 | 5000.00 | 7000.00 | 5000.00 | 15500.00 |
| 6. | மல்லாவி | 3120.00 | 9030.00 | 3200.00 | 2750.00 | 3000.00 | 14740.00 | 3200.00 | 11000.00 |
| 7. | முழங்காவில் | 10000.00 | 10000.00 | 6200.00 | 2200.00 | 3000.00 | 5000.00 | 3500.00 | 10500.00 |
| 8. | குமுழமுனை | 5500.00 | 10000.00 | 5500.00 | 4000.00 | 4000.00 | 15000.00 | 5000.00 | 5500.00 |
| 9. | பூநகரி | 4620.00 | 20000.00 | 5000.00 | 4500.00 | 4500.00 | 5200.00 | 6650.00 | 10000.00 |
| 10. | பரந்தன் | 7350.00 | 13885.00 | 8550.00 | 2000.00 | 10000.00 | 5000.00 | 54500.00 | 20000.00 |
| 11. | இரணைமாநகர் | XXX | XXX | XXX | 6000.00 | 5500.00 | 7000.00 | 6500.00 | 7500.00 |
| | **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | முல்லைத்தீவு | 20450.00 | 53570.00 | 33620.00 | 25600.00 | 32000.00 | 115000.00 | 28000.00 | 55500.00 |
| 2. | புதுக்குடியிருப்பு | 21000.00 | 64500.00 | 20800.00 | 16000.00 | 20300.00 | 81150.00 | 15000.00 | 28000.00 |
| 3. | மாங்குளம் | 2500.00 | 3500.00 | 1500.00 | 1000.00 | 1000.00 | 7000.00 | 2000.00 | 3000.00 |
| 4. | இரணைப்பாலை | 11000.00 | 37000.00 | 12000.00 | 10300.00 | 10200.00 | 13000.00 | 10000.00 | 19000.00 |
| 5. | அளம்பில் | 7000.00 | 12500.00 | 5000.00 | 5000.00 | 9000.00 | 10000.00 | 47610.00 | 10000.00 |
| 6. | கூழாமுறிப்பு | 10000.00 | 25000.00 | 7000.00 | 5000.00 | 10000.00 | 12000.00 | 28500.00 | 19000.00 |
| 7. | கொக்கிளாய் | 3340.00 | 12150.00 | 4880.00 | 2000.00 | 3450.00 | | | |
| 8. | உடையார்கட்டு | 2500.00 | 7500.00 | 2500.00 | 1500.00 | 1500.00 | 2000.00 | 2000.00 | 6000.000 |
| 9. | தர்மபுரம் | 4000.00 | 11000.00 | 3500.00 | 2500.00 | 4120.00 | 9070.00 | 2000.00 | 9000.00 |
| 10. | உடுப்புக்குளம் | 4590.00 | 13300.00 | 5500.00 | 3700.00 | 4550.00 | 13470.00 | 8340.00 | 9400.00 |
| 11. | சிலாவத்தை | 5000.00 | 10100.00 | 3950.00 | 4200.00 | 3800.00 | 25000.00 | 3500.00 | 10000.00 |
| 12. | முகத்துவாரம் | 16710.00 | 6000.00 | 5000.00 | 5520.00 | 10050.00 | 7730.00 | 7310.00 | 7620.00 |

அருட்பணி.செ.நேசநாயகம் – நிதிமுகாமையாளர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
05
.
08
.
1946



இறப்பு
23
.
02
.
2025

## அமரர். P. F. J. தேவநாயகம்

(Retired School Building Engineer)

**"கர்த்தர் என் மேய்ப்பர் எனக்குக் குறைவில்லை" (சங். 23:1)**

அன்பு அப்பா... உயிர் பிரிந்து ஓராண்டு உருண்டோடி மறைந்தாலும், உங்கள் திருமுகம் எங்கள் விழிகளில் நீங்காமல் வாழ்கிறது. வார்த்தைகள் மௌனமாகிப் போனாலும், எங்களின் கண்ணீர் துளிகள் இன்றும் உங்கள் நினைவுகளையே தேடுகின்றன. அம்மாவின் பிரிவுக்குப் பின், நான்கு ஆண்டு காலத் தனிமைப் பயணத்தை முடித்துவிட்டு, எமக்காகக் கடல் கடந்து நீங்கள் லண்டன் வந்த அந்தப் பத்து மாதங்கள் - எங்கள் புலம்பெயர் வாழ்வின் மறக்க முடியாத வசந்த காலம்! பேரப்பிள்ளைகளின் மழலையிலும், எங்கள் அரவணைப்பிலும் நீங்கள் திளைத்த அந்தத் தருணங்கள், எங்களின் என்றும் அழியாத பொக்கிஷங்கள். உறவுகள், உற்ற நண்பர்கள் அனைவரினதும் சபைகளிலே நீங்கள் பங்கு கொள்ள மறந்ததில்லை. எந்தச் சபையிலும் நீங்கள் அதற்கேற்ற நாகரிகத்தில் உடையணிந்து, புன்சிரிப்போடும் செந்தழித்த முகத்தோடும் பங்குகொள்ளும் பாங்கை இனி என்று காண்போம் அப்பா! "உடைந்த இருதயமுள்ளவர்களுக்கு கர்த்தர் அருகில் இருக்கிறார்" என்று எங்களைத் தேற்றிய நீங்களே, ஒரு ஞாயிற்றுக்கிழமை மதிய வேளையில், எவ்வித நோயுமின்றி, நோவுமின்றி அமைதியாக ஆண்டவரின் மடியில் இளைப்பாறச் சென்றீர்கள். அந்த நொடிப்பொழுதில் நிலை குலைந்து போனோம்... உங்கள் நினைவுகளைச் சுமந்து கொண்டு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என நாங்கள் அனைவரும் இன்றும் மூச்சற்று நிற்கிறோம். "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்ற இறைவாக்கின் நம்பிக்கையில், நீங்கள் கர்த்தருக்குள் இளைப்பாறுகிறீர்கள். மீண்டும் ஒருமுறை விண்ணகத்தில் உங்களைச் சந்திக்கும் வரை, நீங்கள் காட்டிய விசுவாசமே எங்கள் வாழ்வின் ஒளியாக அமையட்டும். உங்கள் ஆத்துமா கர்த்தருக்குள் நித்திய இளைப்பாற்றி அடையட்டும்.

*சகோதரர், மைத்துனர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.*

## கிறிஸ்துவில் வேரூன்ற...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கலாசாரத்தால் பாதிக்கப்பட்டவர்கள், ஆன்மீக அளவில் கண்டுகொள்ளப்படாதவர்கள். சமூகத்தால் ஓரங்கட்டப்பட்டவர்கள்... என இவர்கள் அனைவருக்கும் உதவிக்கரம் நீட்டுவதுதான் நம்முடைய கிறித்தவர்களின் அவசியக் கடமையாக இருக்கிறது.

வன்முறைகளால் பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்ட பெண்கள் இரு மடங்கு ஏழைகளாய் மாறி இருக்கிறார்கள் என்பதைத் திருத்தந்தை சுட்டிக்காட்டத் தவற வில்லை. செல்வராயினும் இயேசு ஏழையானார் எளிய மக்களோடு வாழ்ந்தார் தலை சாய்க்கக் கூட இடம் இல்லாத அளவுக்குப் பற்றற்றவராய் வாழ்ந்தார் என்று நற்செய்தி யில் நாம் வாசித்தாலும், மீண்டும் மீண்டுமாய் மறுவாசிப்புச் செய்து அதை ஏழை எளிய இயேசுவைக் கடைப்பிடிக்க அழைக்கப்படுகின்றோம்.

2028 ஆம் ஆண்டை புனித பிரான்சிஸ் அசிசியார் ஆண்டாகத் திருத்தந்தை லியோ அவர்கள் அறி வித்திருக்கிறார்கள். செல்வராக இருந்தாலும் இயேசுவின் அடிச்சுவட்டில் ஏழையாகவே வாழத் தொடங்கி, தொழுநோயாளிகளை எல்லாம் தன்னு டைய கரங்களால் அரவணைத்து “யாரும் சமூகத் தால் ஓரம் கட்டப்பட்டவர்கள் அல்லர்” என்பதை உலகுக்கு உணர்த்திய புனித பிரான்சிஸ் அவர்களும் இத்தவக் காலத்தில் நம்முடைய முதன்மை மாதிரியாக நம் கண் முன் வலம் வரட்டும்

திரும்பத் திரும்ப நாம் மறையுரைகள் வழியாக, இறைவார்த்தையை வாசிப்பதன் வழியாக, ஏழை எளியவருக்குக் கைகொடுக்கவேண்டும் என்று நாம் வாசித்தாலும், ஏன் நம்முடைய இதயம் அவர்களைக் கண்டுகொள்ள மறுக்கிறது என்பதையும் திருத்தந்தை சாடுகிறார்.

”கண்டுகொள்ளாமை“ மிகப்பெரிய பாவம் என்பதைச் சாடுகிற திருத்தந்தை. புலம்பெயர்ந்த சகோதரர்  சகோதரிகளை நாம் ஏற்றுக்கொள்ளவும், அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கவும். அனாதைகளுக்குப் புகலிடம் கொடுக்கவும் நம்மைக் கேட்டுக்கொள்கிறார்.

மருத்துவ வசதியின்றி, கல்வி வசதியின்றி வாடுகிற மக்களுக்குக் கல்விச் செல்வத்தையும், “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்“ என்பதையும் நினை வில் கொண்டு மக்களுக்கு அறப்பணிகள் ஆற்றிட இந்தத் தவக்காலம் நமக்கு அறிவுறுத்தவேண்டும்.

ஒரே ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த தாய், அந்தக் குழந்தையை எவ்வளவு கண்ணும் கருத்துமாய் நோய்களிலிருந்து பாதுகாப்பாளோ அதுபோல, திரு அவை உறுப்பினர்களாகிய நாம் நோயுற்ற ஒவ்வொருவரையும் கண்காணிக்க முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தார் புனித கமிலஸ், அனாதையாக, அந்நியனாக, அகதியாக அடைக்கலம் கேட்டு வரும் மக்களுக்கு இறைப் பிரசன்னத்தைக் கொடுக்சுவே திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த அறப்பணிகள் வழியாக நாம் செய் தோம் என்றால், இந்தத் தவக்காலம் உண்மையான, அர்த்தமுள்ள காலமாக மாறும்,

கிறிஸ்துவில் வேரூன்றிய வாழ்வு என்பது, இறைவனோடு ஒன்றிணையும் தருணம், நோன்பிருக்கும் தருணம், அறப்பணிகள் ஆற்றுகின்ற தருணம் என்ற மூன்றையும் உள்ளடக்கியது என்பதை மனத்தில் கொண்டு அர்த்தமுள்ள விதத்தில் இந்தத் தவக்காலத்தைக் கொண்டாட முன்வருவோம்.

## துயர் பகிர்கின்றோம்


யாழ் மறைமாவட்டக் குருவும் கனடா ரொறன்றோ புனித ஆரோக்கிய அன்னை ஆலய பங்குத்தந்தையுமான அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரின் அன்புத் தந்தையார் **திரு. பஸ்தியாம்பிள்ளை வில்லியம் கொலின்ஸ்** அவர்கள் கடந்த 22.01.2026 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

◆◆◆

யாழ் மறைமாவட்டக் குருவும் இரணைமாதாநகர் பங்குத்தந்தையுமான அருட்பணி தயாதீபன் அடிகளாரின் அன்புத் தந்தையார் **திரு. குமாரசிங்கம்** அவர்கள் கடந்த 22.01.2026 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றி ருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன் கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## 6ம் வருட நினைவஞ்சலி

மண்ணில்
24
.
08
.
1959



விண்ணில்
22
.
02
.
2020

### அமரர்
### ஷிவோன் நாளினி ரவீந்திரன்

'ஆண்டவரின் இல்லத்தில்
என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்"
(தி.பா.29:4)

07, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

AD-67

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மண்டைதீவுப் பங்கைச் சேர்ந்த திரு. வில்லியம் கஸ்பார் அவர்கள் இலங்கை கலாசார அலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்டு வரும் உயர் அரச விருதாகிய 2025ம் ஆண்டுக்கான "கலாபூஷணம்" விருதை, தை மாதம் 12ம் திகதி கொழும்பு அலரிமாளிகையில் பெற்றுக் கொண்டார். ஈழத்தமிழ் கலைகளுக்குத் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணித்து நாட்டுக் கூத்துக் கலையில் புகழ் பூத்த அண்ணாவியாராக இருந்து கலையை வளர்த்து, கத்தோலிக்க திருஅவையில் அரும்பணியாற்றி வருகின்றார்.

அண்ணாவியார் வில்லியம் கஸ்பார் அவர்கள் "தர்மசீலி", "யோசவ்வாஸ்" ஆகிய தென்மோடி நாட்டுக்கூத்து நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அண்ணாவியார் அவர்கள் வேலணை கலாசாரப் பேரவையால் 2015 இல் "கலைவாரிதி" விருதும், யாழ் திருமறைக் கலாமன்றத்தினரால் 2019ம் ஆண்டு "கூத்துக் கலைமாமணி" விருதும், யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவையால் 2021ம் ஆண்டு "யாழ்முத்து" விருதும், வடக்கு மாகாணப்பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சினால் 2024ம் ஆண்டு "கலைக்குரிசில்" விருதும் பெற்றுக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அண்ணாவியார் வில்லியம் கஸ்பார் அவர்களின் கலைப்பணி தொடர பாதுகாவலன் வாழ்த்தி மகிழ்கின்றது.

## மறைக்கல்வி மாணவர்கள் மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வு



யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையமும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் இணைந்து கரவெட்டிப் பங்கில் முன்னெடுத்த மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வு கடந்த 08ஆம் திகதி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை விஜின்ரஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் யாழ். மறை மாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மறையா சிரியர்களுக்கான பாடத்திட்ட தயாரிப்பு, கற்பித்தல் முறை ஆகியவை தொடர்பான கருத்துரைகளும் மாணவர்களுக்கான குழுச் செயற்பாடுகள், விளையாட்டுக்கள், கருத்துரைகள் என்பனவும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் 120 மாணவர்களும் 32 மறையாசிரியர்களும் பங்குபற்றிப் பயன டைந்தனர்.

## வன்னி கியூடெக் நிறுவனத்தில் களப் பயிற்சி



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவன செயற்திட்டங்கள் தொடர்பான அனுபவங்களையும் விளக்கங்களையும் பெற்றும்கொள்ளும் நோக்கோடு வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் இணைந்து மேற்கொண்ட களத் தரிசிப்புப் பயணம் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள வன்னி கியூடெக் நிறுவனத்தைத் தரிசித்த மாணவர்கள் அங்கு கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நிறுவன வரலாறு, செயற்திட்டங்கள், செயற்திட்ட முகாமைத்துவம், பெண்கள் வலுவூட்டல் அமைப்புக்கள் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து மாணவர்கள் களத்தரிசிப்பை மேற்கொண்டு பரந்தன் பிரதேச சமூக மட்ட பயனாளிகளுடன் கலந்துரையாடி அனுபவங்களை பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் 85 மாணவர்களும் விரிவுரையாளர்களும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## தாதியர் பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



திருச்சிலுவை கன்னியர்களால் நடாத்தப்படும் திருச்சிலுவைத் தாதியர் நிலையத்தில் தாதியர் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் மற்றும் தாதியர் தொப்பி வழங்கும் நிகழ்வு கடந்த 06ஆம் திகதி நடைபெற்றது. நிலையப் பொறுப்பாளர் அருட்சகோதரி ஜெரால்டின் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மூன்று ஆண்டு கால தாதியியல் டிப்ளோமாவை நிறைவு செய்த 15 பேர், தாதிய உதவியாளர் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த 13 பேர் மற்றும் பராமரிப்பாளர்கள் 4 பேருக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. பிராந்திய சுகாதார சேவை உதவி இயக்குநர் வைத்தியர் குமாரவேல் அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், தாதிய மாணவர்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## பயங்கரவாதச் தடை ச் சட்டத்தின் புதிய மாற்றம் குறித்து விழிப்புனர்வு கருத்தமர்வு



இலங்கை நாட்டில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துசெய்து அதற்கு மாற்றீடாக அரசாங்கத்தை பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றும் புதிய சட்டத்தை அமுல்படுத்துவதால் உருவாகவுள்ள நிலமைகள் பற்றிய விழிப்பணர்வையும் அறிவையும் ஏற்படுத்தும் நோக்கில் யாழ். மறைமாவட்ட குருக்களை இணைத்து முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு கருத்தமர்வு கடந்த 09ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் சட்டவாளர் திரு. குருபரன் அவர்கள் வளவாளராகக் கலந்து கருத்துரை வழங்கி கலந்துரையாடலை வழிப்படுத்தினார். இந்நிகழ்வில் 50 வரையான குருக்கள் பங்குபற்றியிருந்தனர்.

## மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு




கனடா திருமறைக்கலாமன்றத்தின் அனுசரணையில் வவுனியா வடக்கு ஒதியமலை பிரதேசத்திலுள்ள பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது.

அளம்பில் சுவாமித் தோட்டத்திற்குப் பொறுப்பான அருட்தந்தை யூட் அமலதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருமறைக்கலாமன்ற உதவி நிர்வாக இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரீபன் அவர்கள் கலந்து மாணவர்களுக்கான ஒருதொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார்.

மேலும் கனடா திருமறைக்கலாமன்றத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு திருமறைக்கலாமன்ற மாணவர்களுக்கும் மாங்குளம், உருத்திரபுரம், உரும்பிராய், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள சிறுவர் இல்லங்களிற்கும் கிளிநொச்சியிலுள்ள விசேட தேவையுடைய சிறுவர் இல்லத்திற்கும் ஒருதொகுதி கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## முப்பொன் அகவையில் பாதுகாவலன்

ஒன்றிரண்டாய் ஆண்டுகளும்
ஒருநூறு ஐம்பதுமாய்
எம்பாது காவலன்
அன்பியப் பத்திரிகை
இன்றுகாண் பெருமை
சீரிதழின் திறமை
ஆசிரியர் ஆளுமையும்
ஆதாரப் பணித்திறனும்
குன்றிய கோபுரமாய்
உயர்ந்தே ஒளிபகரும்
காலமதமின் பதிவாகும்
கருத்தாள இதயமாய்
பொன்விழா மூன்றுகாண்
இலக்கிய திறன்மிகு
பாதுகாவலனே பணிதொடர
புலம் நீடு வாழ்த்தும்.

கலாபூஷணம் கே.ஆர்.திருத்துவராஜா

## இளையோருக்கான வளவாளர் வதிவிடப் பயிற்சி




யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான வளவாளர் வதிவிடப் பயிற்சி கடந்த 7,8 ஆம் திகதிகளில் யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்பநல நிலையத்தில் நடைபெற்றது. ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை ஜோண் குரூஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் "எதிர்கால வளவாளர்களை உருவாக்கும் நோக்கில் சமூகத்தொடர்பும் தலைமைத்துவமும்" எனும் கருப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகள், திருப்பலி, நற்கருணை வழிபாடு, கலந்துரையாடல், அனுபவப் பகிர்வு என்பன இடம்பெற்றன. இறுதிநாள் நிகழ்வுகளில் பங்குபற்றிய இளையோருக்கான சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் மற்றும் அகவொளி குடும்ப நலநிலைய இயக்குநர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் புனிதர்களின் கடற்பவனி



நெடுந்தீவின் கடல் வளமும் மக்களின் வாழ்வாதாரமும் மேம்பட நெடுந்தீவுப் பிரதேசத்தில் கோயில்கொண்ட அனைத்துப் புனிதர்களின் பரிந்துரை வேண்டி முன்னெடுக்கப்பட்ட சிறப்புக் கடற்பவனி கடந்த 01ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை பத்திநாதன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் முன்னெடுக்கப்பட்ட இப்பவனி நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயக் கடற்பரப்பில் ஆரம்பமாகி புனித அந்தோனியார், புனித சவேரியார், புனித மரியன்னை, புனித பற்றிமா அன்னை, புனித யுவானியார், புனித தோமையார், புனித யாகப்பர், இறையிரக்க ஆண்டவர், புனித லவுறேஞ்சியார் மற்றும் புனித யூதாததேயு ஆகியோரின் திருச்சொருபங்களையும் இணைத்து கடற்பவனியாக மணற்கடற்கரைப் பகுதியை வந்தடைந்தது. தொடர்ந்து திருச்சொருபங்கள் வீதி வழியாக வேளாங்கண்ணி சிற்றாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அன்று மாலை சிறப்பு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து சுருபங்கள் கடல் வழியூடாக அந்தந்த ஆலயங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு மாசி மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.